பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை ( 31-10-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 316

லாலாசோப்
சணசயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
விக்னேஸ்வரா
பல்பொருள்வாணிபம்
923நல்லூர் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.
லாலா சோப்தொழிற்சாலை
அச்சுவேலி. (கி985)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## பண்டாரவளை படுகொலையின் எதிரொலி

## ★ கினிகந்தனையில் 20 கடைகள் தீக்கிரை

## ★ தமிழர் தாக்கப்பட்டு உடமைகள் சூறை

# மலையகத்தில் கலவரம் ஓயவில்லை

# தொடர்ந்து ஊரடங்குசட்டம் அமுல்!

## அமைதிகாக்க தலைவர்கள் வேண்டுகோள்

(பண்டாரவளையிலிருந்து நமது நிருபர்)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலைய முகாமில் கடந்த புதன் கிழமை நிராயுதபாணிகளான அப்பாவி தமிழ் இளைஞர்கள் 29 பேர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மலையகத்தின் பலபகுதிகளிலும் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

இதனை அடுத்து கினிகந்தனைப்பகுதியில் சுமார்20கடைகள் வரைதாக்கப்பட்டு சூறையாடப்பட்டபின் தீவைத்து எரிக்கப்பட்டதுடன், அப்பகுதிக்கு பஸ்ஸில்வந்திறங்கியதமிழர்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு அவர்களது உடமைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. மலையகப் பகுதிகளில் நிலவும் பதற்றத்தை அடுத்து அமைதி காக்குமாறு மலையகத் தமிழ்த் தலைவர்கள் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

பண்டாரவளை தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்சள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்துமலையகத்தின் பலபாகங்களிலும் வன்முறைகள் தலைதூக்கி வருவதனால் அப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மலையகத்தில் இடம்பெற்ற கடையடைப்பு, அமைதிப்பேரணியின் போது இடம் பெற்ற அசம்ப விதத்தின் போது

(8ம்பக்கம்பார்க்க)

## இனக்கலவரத்தை தூண்டுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு

### படையினருக்கு ஜனாதிபதி உத்தரவு

## சிற்றி ஒவ் றிங்கோ இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருமலை நோக்கி புறப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு மேலும் கேட்கப்பட்டுள்ளது. (ந-4)

## சடலங்கள் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்த 10 பேரின் சடலங்களை படையினர் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் இரவு 5 சடலங்களும், நேற்று பிற்பகல் 5 சடலங்களுமாக மொத்தம் பத்து சடலங்களை படையினர் ஒப்படைத்துள்ளனர். [வ-4-12]

## வெட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

(புலோலி)

சரசாலைப்பகுதியில் இருந்து வாள், கத்தி வெட்டுக்காயங்களுடன் ஒருவர் நேற்று பருத்தித்துறை ...

களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளான சண்முகம் என்பவர்

## படையினருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாட்டின் எப்பகுதியிலும் இனக்கலவரத்தை தூண்டுவதற்கு, முயற்சி செய்யும் எந்த ஒரு நபருக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பண்டாரவளை படுகொலையைத் தொடர்ந்து நுவரெலியா, தலவாக்கொல்ல பகுதியில் நேற்று நிலவியபதற்றத்தை அடுத்தே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நாட்டில் அமைதியாக வாழும் தமிழ் சிங்கள மக்க

(8ம் பக்கம் பார்க்க)

இருந்து வாள், கத்தி வெட்டுக்காயங்களுடன் ஒருவர் நேற்று பருத்தித்துறை ஆதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீசாலை வடக்கைச்சேர்ந்த மு.சண்முகம் (வயது 50) என்பவரே வெட்டுக் காயங் வெட்டுக்காயங்களுக்குள்ளான சண்முகம் என்பவர் வீட்டில் தனிமையில் இருந்தபோதே வெட்டப்பட்டார் என்றும், அவரை அயலவர்கள் வைத்தியசாலையில் அனுமதித்தார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ.52)

# சந்திரசேகரன் எம்.பி 4-வது மாடியில் வைத்துவிசாரணை கொட்ட கொலவில் பதற்றம்!

(கொழும்பு)

கொட்டகொலவில் கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட சந்திரசேகரன் கொழும்பில் 4ஆவது மாடியில் வைத்துகொட்டகொல சம்பவம்தொடர்பாகதீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

★ கந்தப்பு தவராசாகொலையின்எதிரொலி

# கரவெட்டியில் இளம்பெண் கத்தி வெட்டுக்குப்பலி

(புலோலி)

கரவெட்டியில் கடந்த புதன் இரவு சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்துபிள்ளைகளின் தந்தையான கந்தப்பு தவராசாவின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட செல்வராணி சுதாகரன் (வயது 29) விடுவிக்கப்பட்ட பின் நேற்று இனம் தெரியாதோரால் தச்சந்தோப்பு கரவெட்டியில் வைத்து நேற்று மாலை 6மணியளவில் வெட்டிக் கொல்லப்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரிகள் நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தாது கடமைகளைஉதாசீனம்செய்தநான்கு பொலிஸ் அதிகாரிகளை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் பண்டாரவளை, ஊவா பரணகம, வியந்தலாவ

( 8ஆம் பக்கம் பார்க்க)

# வவு- மன்னாரில் பூரண ஹர்த்தால் புளொட் உறுப்பினர் நால்வர் கைது

(வவுனியா)

பண்டாரவளை படுகொலைகளைக் கண்டித்து வவுனியா நகரில்புளொட்அமைப்பினரால்எற்பாடுசெய்திருந்த ஹர்த்தால் பூரண வெற்றியளித்திருப்பதாக முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்தன் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் 29தமிழ்இளைஞர்கள்படுகொலை செய்யப்பட்டதை யடுத்து வவுனியாவிலும்,

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ்

# இராசி பலன்

31-10-2000
ஐப்பசி 15, செவ்வாய்
சதுர்த்தி பி. ப. 4-44 வரை
கேட்டை மு ப. 12-24 வரை
ராகுகாலம் 3-30 - 4-33
சுபநேரம் 10-33 - 12-03
சதுர்த்தி விரதம்
சித்தாமிர்தம்

★ மேடம்
பிரயாணம், கட்டுப்பாடு வயிற்றுக் கோளாறு, மனப் பயம்.

★ இடபம்
எதிர்பராத அச்சம், உடல் உபாதை, பிரயாண பயம், காரிய தாமதம்.

★ மிதுனம்
சுவாரஸ்யம், போசனசுகம், தனலாபம், வாகனவசதி, கௌரவம்.

★ கடகம்
சுகவாழ்வு, பகைவர் விலகுவர், சந்தோசமிகுதி, காரியம் கைகூடும்.

★ சிங்கம்
புத்திரரால் கவலை, காரிய இடையூறு, தாழ்ந்தசுபாவம், சிறுவியதி.

★ கன்னி
தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், தவ்வழி உறவு, முயற்சி தாமதம்.

★ துலாம்
பிரயாணம், சகோதரர் உதவி, தனவரவு, குடும்ப சுகம், முயற்சி ஜெயம்.

★ விருச்சிகம்
வாக்குக் கலகம், காரிய தாமதம், தனவிரயம், கௌரவக்குறைவு.

★ தனு
உடல் நலம், விருந்துண்ணல் சயன சுகம், புதிய சிந்தை.

★ மகரம்
தனவிரயம், காரிய நட்டம், கோபப்படுதல், பிரயாணம்.

★ கும்பம்
கீர்த்தி, தனலாபம், மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு.

★ மீனம்
தொழில் அதிகாரம், முயற்சி கைகூடும், அதிகாரிகள் சந்திப்பு, செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் இந்தியப் பிரதமரும் ஜவஹர்லால் நேரு, கமலாநேரு தம்பதிகளின்ஏக புத்திரியும் இந்தியாவின் இமயம் என வர்ணிக்கப்படுபவருமான திருமதி இந்திராகாந்தியின் பதினாறாவது நினைவுதினம் இன்றாகும்.

## ★ அரசியல் வீராங்கனை

# அன்னை இந்திராகாந்தியின்

# 16வது நினைவு தினம் இன்று

1917 ஆம் ஆண்டு நவம்பர்மாதம்19ஆம் திகதி பிறந்து இவர் சுவிஸ்லாந்து மற்றும் இங்கிலாந்து ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவராவார்.

1942 ஆம் ஆண்டுபெரோஸ் காந்தியை திருமணம் செய்து சஞ்சேய் காந்தி, ராஜீவ்காந்தி ஆகியவர்களைப் பெற்றெடுத்தார்.

அகில இந்தியகாங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை 1959 ஆம் ஆண்டு பெற்ற இவர் 1964 ஆம் ஆண்டு மத்திய தகவல்செய்தி அமைச்சராக பாராளுமன்றத்துக்குள்பிரவேசித்து, 1966 ஆம் ஆண்டுஇந்தியப்பிரதமர் லால் பகதூர்சாஸ்திரி அகால மரணமானதைத்தொடர்ந்து இந்தியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

அரசியலில் தென்னாசியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் உலகின் அரசியல் வீராங்கனை எனவும் போற்றப்பட்டு மிளிர்ந்த இந்திரா காந்தி 1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் அவரது மெய்ப்பாதுகாவலரான சீக்கிய இனத்தைச் சேர்ந்த சத்வந்சிங் பெண்ட்சிங் என்ற கொலைஞனின் துப்பாக்கி வேட்டுக்குப்பலியானார். ந-2

# இடம் பெயர்ந்தகட்டட, கூலி தொழிலாளர் வருமானமின்றி அவதி!

## அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனிக்குமா?

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்வு காரணமாக வலிகாமம் வடமராட்சிப் பிரதேசங்களில் கடந்த ஆறுமாதங்களாக கட்டடத் தொழிலாளர்கள் கூலித்தொழிலாளர்கள் மற்றும் விவசாயக் கூலித்தொழிலாளர்கள் எவ்விதமான தொழில் வாய்ப்புக்களோ அல்லது வருமானமோ அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகையசுயதொழிலாளர்களின் ஜீவேனோபாயத்துக்கு உதவிகள் ஆதரவுகள் எதையுமே எந்தவொரு அமைப்பும் வழங்க முன்வரவில்லை எனத் தொழிலாளர்கள் கவலைப்பட தெரிவிக்கப்படுகின்றது.

தாம்படும் துன்பங்கள், துயரங்கள் மற்றும் கஷ்டங்கள் பற்றி அரச அதிகாரிகளின் கவனத்துக்குக்கொண்டு வந்திருந்த போதிலும் கூடதம்பால் எதுவும் செய்ய முடியாது எனகைவிரித்துள்ளனர்

இதேவேளை, இத் தொழிலாளர்கள் தம்முடன் எடுத்து வந்த சிறு சிறு நகைகளை விற்றே தமது குடும்பங்களை பராமரித்து வருகின்றனர் இந்த நிலையில் இடம்பெயர்வு ஏற்படுத்திய துர்அதிஷ்டவசமான வாழ்க்கை நிலையை பயன்தரும் வகையில் அமைப்பதற்கு முயற்சிகள் எதுவும் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வில்லை, என இத்த கையசுயதொழிலாளர்களால் கூறப்பட்டுவருகின்றது (க-77

## ஒருவர் உயிரிழப்பு

நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தில்

● மறைவாணி (இராமச்சந்திரன் துஷ்யந்தினி)

கிளிநொச்சி

என்ற போராளிஉயிரிழந்ததாக விடுதலை புலிகள் அறிவித்துள்ளனர்.

## ★ அகில இந்தியகாங்கிரஸ் கட்சியில்

# நேரு குடும்ப தலைமைதுவத்துக்கு எதிராக ஜிதேத்திர பிரசாத் போட்டி

(சென்னை)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பதவிக்கு கட்சிக்குள் இடம் பெறும் தேர்தலுக்காக தாக்கல் செய்த வேட்பு மனுவை வாபஸ் பெறமாட்டேன்.

இவ்வாறு கட்சியின் மூத்த தலைவர் ஜிதேந்திரபிரசாத் நேற்று புதுடில்லியில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது.

கட்சியின் தலைமைத்துவத்துக்கும் அடிமட்டதொண்டர்களுக்கு இடையே தொடர்பு அறவே இல்லை எனவும் சிலதீயசக்திகள் தலைமையை சூழ்ந்து கொண்டு அதனை புற்றுநோய் போன்று அறுத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், அவற்றில் இருந்து கட்சியை மீட்டு எடுக்கவே தாம்கட்சித் தலைமைப் பதவிக்கு போட்டியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை காலம் காலமாக காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவம் நேரு குடும்பத்துக்கு உரியதாகவே காணப்பட்டது. இதில் தற்போது புதியதோர் சக்தியின் தோற்றம் கட்சியின் நிலையில் புதியதோர்சவாலாக உள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (வ-2)

# மட்டுவில், சாவகச்சேரி பகுதியில் ஹினி 3 இராணுவ நடவடிக்கை

## 5 கிலோ மீ. தூரம் மீட்கப்பட்டதாம்

வடபகுதியில் தொடரும் ஹினிவீர 3 இராணுவ நடவடிக்கையின் போது, விடுதலைப்புலிகளின் 18 சடலங்களை படையினர் கண்டெடுத்திருப்பதாக இராணுவப் [illegible] ளார்

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின்போது சாவகச்சேரிக்கும் மட்டுவிலுக்கும் இடையே 5 கிலோ மீற்றர் [illegible]

பின் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது புலிகளுக்குச் சொந்தமான யுத்த உபகரணங்கள் ஆயுதங்கள் என்பன மீட்கப்பட்டதாக [illegible]

## விவேகமற்ற செயல்

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ப. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டமை விவேகமான நடவடிக்கை அல்ல, இவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தேசிய தொழி [illegible]

## புலிகள் சுட்டதில் பொலிஸார் படுகாயம்

## புலிகள் சூட்டதில் பொலிஸார் படுகாயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது கடந்த ஞாயிறன்று இரவு 10 மணியளவில் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் கடமையில் இருந்த பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்தார்.

புலிகளின் தாக்குதலையடுத்து பொலிஸ் தரப்பில் இருந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும், மோட்டார் ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. (உ-60)

## நோயாளருக்கு பயண அனுமதி

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு வைத்திய உதவி பெறச்சென்ற 8 நோயாளர்களும்5 உதவியாளர்களும் மீண்டும் கிளிநொச்சி செல்வதற்குரிய பயண அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவில் இருந்து 13 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

லைப்புலிகளின் 18 சடலங்களை படையினர் கண்டெடுத்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்னா தெரிவித்துள்

கப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின்போது சாவகச்சேரிக்கும் மட்டுவிலுக்கும் இடையே 5 கிலோமீற்றர் தூரத்தினை படையினர்கைப்பற்றியிருப்பதாகவும், அதன்

களுக்குச் சொந்தமான யுத்த உபகரணங்கள் ஆயுதங்கள் என்பன மீட்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

வடிக்கை அல்ல. இவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்லச்சாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையில் இவ்வாறான கைதுகள் மலையகத்தில் அமைதியை ஏற்படுத்தப்போவதில்லை என்றும் அமைதியை ஏற்படுத்த அரசு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஜே. வி. பி நிபந்தனையற்ற ஆதரவு

(கொழும்பு)

நிலையான ஆட்சி ஒன்றை அமைக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க ஜே, வி. பி. முன்வந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இஷ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும், தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றால் பணயம் வைப்பதை தடுப்பதற்குமே இந் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை ஏற்படுத்தும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவின்றி அரசு செயற்படுமாயின் அதற்கு ஆதரவு வளங்க தயாராக இருப்பதாகவும் ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

இதேசமயம், பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு ஆட்சியமைப்பதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்கு ஜே. வி. பி. முன்பு மறுத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பெற்றோலுக்கு தட்டுப் பாடு

(புலோலி)

பருத்தித்துறையில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருவாரங்களாக புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் இருப்பில் இல்லாததை அறித்துபெற்றோலுக்குத்தட்டுப்பாடு நிலவுவதகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல்தட்டுப்பாட்டை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி க்கொண்டு தனியார் பெற்றோல்விற்பனைக் கடைகளில் லீற்றர் 120 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-52)


## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கிளையைச் சேர்ந்த காங்கேயன்
பேக்கரி உரிமையாளர்
திரு. கி. பரமகுருநாதன்
அவர்களின் தந்தையார்

**தம்பிஜயா கிருபைரட்ணம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(கி-986)

# பேளையிலிருந்த சடலங்களை பார்ப்பதற்கு தடை விதிப்பு!

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வுத் தடுப்பு முகாமில்படுகொலை செய்யப்பட்டயாழ். இளைஞனின் சடலம் பலத்த அடி காயங்களுடனும், முகம் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

அண்மையில் பண்டாரவளை புனர்வாழ்வுத் தடுப்பு முகாமில் நடந்த வெறியாட்டத்தின் போது கொல்லப்பட்ட 26 தமிழ்இளைஞர்களில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்களுடைய சடலங்கள் கடந்தசனிக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதென்பதும் தெரிந்ததே.

பேழையில் வைக்கப்பட்ட நிலையில் படையினரால் உறவினர் வசம் மேற்படி சடலங்கள்ஒப்படைக்கப்பட்டபோது அது திறக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டது.

எனினும்அளவெட்டிப்பகுதி இளைஞனின் சடலம் வைக்கப்பட்டிருந்த பேழையினை உறவினர்களால்திறந்தபோது முகம் பாரிய ஆயுதத்தால் அடித்து நசிக்கப்பட்டிருந்ததாகவும், உடலில் பாரதூர பலவெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

## படையினர் மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

லக்ஸபானா பகுதியில் பொது மக்களுடன் கைகலப்பில் ஈடுபட்ட மூன்று பாதுகாப்பு படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை படுகொலையைகண்டித்துநேற்று முன்தினம்மேற்படி, பகுதியில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட போதே இம் 3 படையினரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(உ)

## சாதாரண பொது மக்கள் விடயத்தில்

# மனித உரிமை அமைப்புகளுக்கு எவ்விதமான அக்கறையுமில்லை

(கொழும்பு)

மனித உரிமைக் கழகங்களும், மனித உரிமை அமைப்புகளும் உயர் மட்டத்தில் உள்ளவர்களையும், செல்வாக்கு உள்ளவர்களையும் மாத்திரமே விடுதலை செய்வதற்கும் அவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுகின்றன.

இவ்வாறுதோட்டத்தொழிலாளர் சங்குலிச் சங்கப் பொதுச் செயலர் பீ.ஓ. ராமையா குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாட்டில் இடம் பெறுகின்ற வன்முறைகளின் போது பாதிக்கப்படுபவர்கள் சாதாரண பொது மக்களும், தொழிலாளிகளுமே. இவர்கள் கைது செய்யப்படும் போது, இவர்களது விடுதலை பற்றியோ பாதுகாப்புப் பற்றியோ எந்த வொருபொது அமைப்பும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்வதில்லை.

எனவே அரசாங்கம் நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் முகமாகச் செயற்படவேண்டும். அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சிவில் அமைப்புக்களும் அரசியல் தொழிற் சங்க அமைப்புக்களும் முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## ஆயுள்வேத மட்டு நகரில் மருந்துக்கு தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரச ஆயுள்வேத வைத்திய சாலையில்மருந்துக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் ஓரேஒரு அரச ஆயுள்வேத வைத்திய சாலை கல்லடியில் மட்டுமே இயங்கி வருகிறது.

நாளாந்தம் பலபகுதிகளிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெற வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள மருந்துப்பற்றாக்குறை காரணமாக வெளியிடங்களில் இருந்து சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம்,ஆயுள் வேத மருந்துப் பொருட்களை தனியார் கடைகளிலும் பெறமுடியாது இருப்பதாகநோயாளர் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்படும் ஆயு வேத மருந்துப் பொருட்காவந்து சேராமையே மருந்துத்தட்டுப்பாட்டிற்கு காரணமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ]

## இலவச மருத்துவ முகாம்

[யாழ்ப்பாணம்]

தீவகலயன்ஸ் கழகத்தினரால் கடந்த29ஆம் திகதி தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இலவச மருத்துவமுகாம்நடத்தப்பட்டது.

தீபகலயன்ஸ் கழகத்தலைவர் வைத்திய கலாநிதி லயன் க.இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்றஇச் சிகிச்சை முகாமில் நானூறிற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது,

[செ[

## திருத்தஞ் செய்யப்பட்டது

(மல்லாகம்)

நீண்ட காலமாக திருத்தஞ் செய்யப்படாது குன்றுங் குழியுமாகக் காணப்பட்ட கொக்குவில் கிழக்கு செம்பாட்டு லேன் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது. (செ-ப-14)

## மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால்

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில்இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை கண்டித்து நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பண்டாரவளைச் சம்பவத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களும் கொலைசெய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஹர்த்தாலை யொட்டி கடைகள், பொதுச்சந்தைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை. அரசஅலுவலகங்கள் ஊழியர்கள் இன்றி மந்த நிலையில் காணப்பட்டது. போக்குவரத்துச் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

(செ-69)

# புங்குடுதீவில் கைதானவர்களின் பெயர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

பேசாலையில் இருந்து இந்தியா தனுஷ் கோடி நோக்கி புறப்பட்ட இலங்கை அகதிகள் படகு ஒன்று புங்குடுதீவு கடற்பரப்பில் கரை ஒதுங்கியுள்ளது.

இப்படகில் இருந்த மூன்று, ஐந்து வயதுக் குழந்தைகள் உட்பட 15 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போதுகாங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று படகோட்டிகளும் அடங்குவர்.

தொடர்ந்தும் காங்கேசன் துறை கடுப்பு முகாமில் உள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு.

□ சுவேரியன் யேசுகுரூஸ் (வயது 32) தாவல்பாடு மன்னார்.

□ செல்வராசா தங்கத்துரை (வயது 27) வண்ணான்குளம் அடம்பன்,

□ இயூயின் ஜட்லஸ் டயஸ் (வயது 17) தாழ்வு பாடு மன்னார்.

இம் மூவரும் படகோட்டிகள ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான

உயிலங்குளம் துணுக்காய் இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதர்களான.

□ சதானந்தன் விமலேஸ்வரன் 20 வயது

□ சதானந்தன் இராமேஸ்வரன் 18 வயது உயிலங்குளம் துணுக்காய்.

ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த

□ சங்கரப்பிள்ளை சதாசிவம் (65 வயது)

□ சதாசிவம் தங்கம்மா (60 வயது)

□ சதாசிவம் தவரூபன் (22 வயது) வன்னேரிக்குளம் கிளிநொச்சி மற்றும்.

□ சின்னத்தம்பி புஸ்பநிதி (35 வயது) 3ம் பிட்டி வெள்ளாங்குளம் மன்னார்.

# தேசிய அரசாங்கம் அமைத்தால் கோரிக்கையை விட்டுக் கொடுப்பேன்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(ஏறாவூர்)

தேசிய ஐக்கிய முன்னணியின் கோரிக்கையினை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையிலேயே பிரதியமைச்சர்களுக்கான நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்தினை அமைச்சர் றவூப் ஹக்கீம் மறுத்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியினால் தேசிய ஐக்கிய முன்னணிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு தாம் கோரி வருவதாக அவர் மேலும் கூறினார்.

116 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசின் 44 அமைச்சர்கள் மற்றும் 44 பிரதியமைச்சர்களும் இடம் பெறுகின்றனர். இந்நிலையில் தேசிய ஐக்கிய முன்னணியின் 11 உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்துள்ளனர். இதனால் விகிதாசாரத்திற்கேற்ப தேசிய ஐக்கிய முன்னணிக்கு எட்டு பதவிகள் வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் றவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

எமது வலியுறுத்தலின் பிரகாரம் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் கோரிக்கைகளில் விட்டுக் கொடுக்கத்தயார் என்றும் அமைச்சர் றவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டார். (ந)

இம் மூவரும் பட கோட்டிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான.

☐ இராசன் விஜயராசா (29 வயது)

☐ விஜயராசா பவாணி (27 வயது)

☐ விஜயராசா தனுஷன் (5 வயது)

☐ விஜயராசா தனுஷிகா (3 வயது)

☐ சின்னத்தம்பி புஸ்பநிதி (35 வயது) 3ம் பிட்டி வெள்ளாங்குளம் மன்னார்.

☐ தியாகராஜா சிறிசாந்தகுமார் (22 வயது) 752 யோகபுரம் மல்லாவி

☐ கோபிந்தசாமி கோபிகிருஸ்ணன் (வயது 11) வன்னேரிக்குளம் கிளிநொச்சி ஆகியோரே இம் மாதம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களாவர். (ந 12)

## இனந் தெரியாதோரால் முஸ்லிம் நபர் கொலை

(கொழும்பு)

புத்தளம் விருத்தோடை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மிகவும் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்,

ஹஜ் இப்ராகிம் நவுதா மரிக்கார் என்ற 45 வயதுடைய முஸ்லிம் குடும்பஸ்தரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

சனிக்கிழமை அதிகாலை வேளை, கத்திகள் சகிதம் புகுந்த இனந்தெரியாத இருவரில் ஒருவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த மேற்படி குடும்பஸ்தரின் கால்களை இறுக்கிப் பிடிக்க மற்றவர் கழுத்தினை வெட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைக் கண்ணுற்ற கொல்லப்பட்டவரின் மனைவியையும் மேற்படி கொலைஞர்கள் கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

இப்படுகொலைக்கான பின்னணி பற்றி ஏதும் தெரியவரவில்லை. (உ)

## பாடசாலை மாணவர்களில் 40 வீதமானோருக்கு நீரிழிவு வியாதி

### வைத்திய அறிக்கைகள் வெளியிடும் அதிர்ச்சி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களில் 40 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புப் பாடசாலை மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளிலிருந்து மேற்படி தகவல்கள் பெறப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு ஆய்வுகளின்படி நூறு மாணவர்களில் இருவர் மாத்திரமே நீரிழிவு நோய்க்காளாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

12 வருடகால இடைவெளியில் அது 40 வீதமாக அதிகரித்திருப்பது குறித்து வைத்தியத்துறை வட்டாரங்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன.

உலக சனத்தொகையில் 350 மில்லியன் பேர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். இவர்களில் 12 வீதமானோர் நகர்ப்புறங்களிலும் ஏனையோர் கிராமப் புறங்களிலும் வசிப்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,

1988 ஆம் ஆண்டு கணிப்பின்படி, 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் 60 வீதத்தினர் மாத்திரமே நீரிழிவு நோய்க்காளாகியிருந்தனர்.

தற்போதைய கணிப்புகளின்படி 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் 85 வீதமானோர் நீரிழிவு நோயாளர்களாக மாறியுளனர்.

மாணவர் மட்டத்தினரிடையே நீரிழிவு நோய்த்தாக்கம் அதிகரிக்கக் காரணம் அவர்களுடைய உணவுப் பழக்க வழக்கமே எனவும் அவ் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# அள்ளியள்ளிக் கொடுத்து அவனி எங்கும் புகழ் பரப்பிய காவிய நாயகர்கள் என்றும் போற்றுதற் குரியோரே

எம்மிடமுள்ளதை மற்றவரின் தேவை நோக்கிப் பகிர்ந்தளித்தல் ஈதல் எனப்படுகிறது. இதனையே தானமென்றும் கொடையென்றும் கூறுவர். அள்ளியள்ளிக் கொடுத்து அவனியெங்கும் புகழ்பரப்பி நிற்போர் பலர். நம்முடைய வேந்தரும், குறுநில மன்னரும் வள்ளல்களும் நம் நெஞ்சிலே என்றும் நிலைத்து நிற்பதற்குப்பெருங் காரணமாக அமைந்ததுவும் இதுவே. போதனை மயிலுக்குப் போர்வையீயச் செய்ததும், அதியமானை, நீண்டகாலம் உயிர் வாழச் செய்யும் அருமருந்தான நெல்லிக் கனியை ஒளவைக்கு மனமுவந்தளிக்கச் செய்ததும், பாரியைப் பறம்பு நாட்டையே பரிசளிக்க வைத்ததும், தேரோட்டியின் வளர்ப்பு மகனாம் கர்ணனை தான் ஈட்டிய புண்ணியமத்தனையையும் தாரைவார்த்துக் கொடுக்கச் செய்ததும், சந்திரன் சுவர்க்கியை புகழேந்திப் புலவருக்கு ஆதரவளிக்கத் தூண்டியதும் இவ் ஈதல் எனும் பேரறப் பண்பேயாகும்.

**பணத்தை கொண்டதல்ல**

ஈதல் எனும் இக்கருமத்தை காசுபணமோ பொருட் பண்டமோ கொண்டுதான்செய்ய வேண்டுமென்றில்லை. எமது அன்பை, கல்வியை, அறிவை, திறனை, உழைப்பை, கணிப்பை, இன்சொல்லை, இரத்தத்தை, உடல், உறுப்புக்களை, அங்கங்களை மற்றவருக்கு வழங்குவதன் மூலமும் இதனைச் செய்ய முடியும்.

ஈபவற்றுள் எல்லாம் தலையாயதாகக் கருதப்படுவது. பசித்தோருக்கு உணவளித்தல் என்பதாகும். 'உண்டி கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவர்' என்கின்றது நம் பழந் தமிழ் இலக்கியம், உடலில் உயிர் தங்கியிருப்பதற்கு உணவு அவசியம் என்பதால் தான் உணவு கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவராகப் போற்றப்படுகின்றார்.

பசித்தோருக்கு உணவளித்தல் பேரறமாகக் கருதப்படுவதாலேயே, பசியால் வாடிய மக்களுக்கு உணவளிக்க, இறைவனிடம், திருநாவுக்கரசுநாயனாரும் திருஞானசம்பந்தப் பெருமானும் படிக்காசு வேண்டியும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் குன்றையூரில் பெற்ற நெல்லைத் திருவாரூருக்கு அனுப்பிவைக்கும்படியும் இறைவனை வேண்டி நின்றனர்.

அப்பூதியடிகள் மடங்களையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்துத் தொண்டாற்றியமைக்கும், ஆறுமுக நாவலர் பிடியரிசித் திட்டத்தின் மூலம் ஊர்கள் தோறும் கஞ்சித் தொட்டிகளை அமைத்துக் கருமமாற்றியமைக்கும் எம்மத்தியில் நடைபெறும் சமய விழாக்களிலும், சமூக வைபவங்களிலும் உணவளித்தலை ஓர் வழக்கமாக்கிக் கொண்டிருப்பதற்கு உயிரோம்பும் பண்பே காரணமாக அமைந்து விளங்குகின்றது.

**உண்மை ஈதல்**

தேவையாயினும் தீமை பயப்பதாக இருப்பின் அதனை வழங்காது விடுத்தும் தேவையற்றவர் ஒன்றைப் பெறுவதையும், தேவையானவர் அதனைப் பெறாது நிற்றலையும் தவிர்த்து மனத் தூய்மையுடன் ஒன்றை மனமுவந்தளித்தலே உண்மையான ஈதலாகும்.

இதுவே யாவர்க்கும் நன்மையானதும் கூட. இதனால் தான் பாத்திரமறிந்து பிச்சையிடு என்று கூறுகின்றார்கள்

இரத்தம் தேவைப்படுபவனுக்கு உடனடியாக இரத்தத்தையும், கால்களில்லாதவனுக்கு செயற்கைக் காலையே, ஊன்று கோலையோ, அல்லாது சக்கர நாற்காலியையோ வழங்குவதும் பார்வையற்றவனுக்கு கண்ணையோ அல்லது கைத்தடி ஒன்றையோ வழங்குவதும், சூதாட விரும்புபவனுக்கு எதனையுமே வழங்காது விடுவதுமே உண்மையில் ஈதலாகும்.

பெயருக்காகவும், புகழிற்காகவும், பதவிக்காகவும் வாரி வழங்குவதோ அல்லது நம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அன்பளிப்புக்களோ, கைலஞ்சமோ கொடுப்பது ஈதலாக மாட்டாது.

கால வரையறையோ, வயதெல்லையோ, கட்டுப்பாடுகளோ ஏது மற்ற நிலையில், யாராலும் எவருக்கும் எந்த இடத்திலும் தேவைக் கேற்ப நன்மை பயக்கும் விதத்தில் இலகுவாக வழங்கக் கூடியதான இவ் ஈதல் எனும் கருமத்தை அகதிகள், ஆதரவற்றவர்கள், அங்கவீனர்கள், நோயாளிகள், வயோதிபர்கள் என்போருக்கு மத்தியில் ஓரளவு நன்னிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

இன்றையஇக்கட்டான இச் சூழலிலே நாம் முதலில் செய்ய வேண்டிய அவசரமான காரியமும் இதுவே தான். நாமும் பாதிக்கப் பட்டவர் தானே. எம்மால் இவற்றை எவ்வாறு செய்ய முடியும் என்று தயங்கிப் பின்னிற்காது, முன்பு பட்ட அல்லலையும், அதனாற் பெற்ற அனுபவத்தையும் நினைவுபடுத்தி, எம் ஒழுங்கிற்கும் சமூக ஒழுங்கிற்கும் பங்கம் ஏற்படாத வகையில் தனித்து நின்றோ சேர்ந்தோ, அல்லது சமய, சமூக நிறுவனங்களுடன் இணைந்து நின்றோ அல்லல் படுவோருக்கு வேண்டியதை வழங்கி உதவ நாம் எல்லோரும் முன்வரல் வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் அல்லல்படுவோரை ஆறுதற்படுத்தி, அமைதியடையச் செய்து ஆனந்தமாக வாழ வைப்பதுடன், மேன் மேலும் நம்பிக்கை யீனங்கள், முரண்பாடுகள், வக்கிரங்கள் தோன்றிச் சமூக உறுதிப்பாடு சிதையாமலுங் காக்க முடியும். ஆடம்பரம் போக்கிலும், அலங்கார நோக்கிலும் எதனையும் செய்யாது ஈதலின் மகத்துவத்தை அவசியத்தை, அதன் தாய்ப்பரியத்தைநன்கு விளங்கி நன்மையளிக்கக் கூடிய எதையும் தேவை நோக்கிற்பகிர்ந்தளித்துஎன்நிலையிலும் பகுத்துக்கொடுத்து வாழ்பவனே உண்மை மனிதன்என்பதை உணர்த்திநிற்போம்.

**திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன் B.A**
**மல்லாகம்**

## கைதான இரு இளைஞரும் காணாமல் போயினர்!

### மனித உரிமை ஆணைக்குழு தகவல்

(வவுனியா)

வவுனியாவில் இம்மாதம் படையினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் காணாமல் போயுள்ளமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது

தர்மலிங்கம் பகீரங்கநாதன் என்ற இளைஞர் அடித்துக் காயப்படுத்தப்பட்ட நிலையில் தாண்டிக்குளம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவரைத் தாம் கைதுசெய்யவில்லையென படையினர் கூறியுள்ளனர்.

இதேவேளைபடையினரால் கைது செய்யப்பட்ட சண்முகலிங்கம் துஷ்யந்தன் என்பவரை தாம் விடுதலை செய்துள்ளதாக இராணுவத்தினர் கூறியுள்ள போதிலும் அவர் இதுவரை வீடு திரும்பவில்லையெனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுதனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(ந)

## பி. பி. ஸி செய்தியாளர் விமானத்தில்அட்டகாசம்!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இலண்டனுக்கு பறந்து கொண்டிருந்த 'எயர் லங்கா விமானம்' ஒன்றில் பயணம் செய்த இலங்கைக்கான முன்னாள் பி.பி ஸியின் செய்தியாளர் 'ஜோர்ச் ஆர்ணி' விமானப் பணியாட்ளிடம் தனக்கு மதுபானம் தருமாறு அடிக்கடி ரகளையிட்டார். இதைத் தொடர்ந்து 'கீற்று' விமான நிலைய அதிகாரிகளினால் அவர் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டார்.

விமானம் பறந்து கொண்டிருந்த வேளை விமானத்திற்குள் சத்தமிட்டவாறு பல்வேறு அட்டகாசங்களை அவர் புரிந்ததாகவும், இதனால் விமானத்தில் பயணம் செய்த பயணிகளுக்கும் அவருக்குமிடையே வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதனையடுத்து லண்டன் விமான நிலையத்தில் வைத்து இவர் அதிகாரிகளினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டார். (ந-4)

## ஆடை தொழிற்சாலைக்கு விஷமிகள் தீயிட்டனர்

## இந்தியா சென்றாவது நிம்மதியாக வாழ நினைத்தோம்; முடியவில்லை

### பருத்தித்தீவில் கைதானோரின் சோகம்

## ஆடைத் தொழிற்சாலைக்கு விஷமிகள் தீயிட்டனர்

(கொழும்பு)

விபண அலுக்கோட்டையிலுள்ள பொலமை ஆடைத் தொழிற்சாலையை இனந் தெரியாத விஷமிகள் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. தொழிற்சாலையினுள் புகுந்த இனந் தெரியாத விஷமிகள் தொழிற்சாலைக் காவலாளியை கட்டி வைத்து விட்டு தொழிற்சாலையை எரித்ததாக தெல்தெனியப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தீ அனர்த்தத்தினால் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் எரிந்து நாசமாகியுள்ளது. (ந-2)

## முகாமிலிருந்த பொலிஸார் தாக்குதலை தடுக்கவில்லை

(கொழும்பு)

விந்துனுவெவ புனர்வாழ்வு நலன்புரி முகாமில் கடந்த புதன்கிழமை படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் ரி. இ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

நலன்புரி முகாமில் சம்பவதினம் கடமையில் இருந்த பொலிசார் வன்முறையைத் தடுக்க வேண்டுமென்ற உணர்வில் கடமையாற்றியிருந்தால் இவ் அநியாய உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கமுடியும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கருதுவதாகவும் இதனாலேயே அன்றையதினம் கடமையிலிருந்த பதின்னான்கு பொலிஸார் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் இது சம்பந்தமாக பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-2)

## புங்குடுதீவில் கைதானோரின் சோகம்

(யாழ்ப்பாணம்)

அரச கட்டுப்பாடற்ற பகுதியில் பொருளாதாரத்தடை காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புடன் யுத்த சூழலினால் பல்வேறு விதமாகப்பாதிக்கப்பட்ட நாம் இந்தியாவிற்குச் செல்ல முயற்சித்தோம்.

ஆனால் அம்முயற்சிகைகூடவில்லை. இவ்வாறு இந்தியா சென்ற சமயம் புங்குடுதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்அகதிகள் கவலையுடன் தெரிவித்தனர். அவர்கள் மேலும்தெரிவித்ததாவது

பேசாலையில் இருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கு செல்வதற்காக இம்மாதம் 18 ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு படகில் ஏறிபுறப்பட்டோம்.

படகு புறப்பட்டு இந்தியா நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது நடுக்கடலில் படகு இயந்திரக் கோளாறு ஏற்பட்டு செயலிழந்தது. படகோட்டிகள் எவ்வளவு முயற்சித்தும் இயந்திரத்தை மீள இயக்க முடியாமல் கைவிரித்தனர்.

நடுக்கடலில் எவரின் உதவியும் பெற முடியாத நிலையில் உயிரை கையில் பிடித்தபடி பரிதவித்தோம்.

நடப்பது நடக்கட்டும் என்ற நிலையில் இருந்த நாம் எமது போர்வையைபடகில் உயர்த்தி பாய் போன்று பிடித்திருந்தோம். இவ்வாறு இரு இரவுகளும் ஒரு பகலுமாகப்பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினோம் காற்றின்திசைவழியே படகு சென்றது.

நடுக்கடலில் படகில் இருந்தவாறு இறைவனை இறைஞ்சினோம். இறுதியில் கரையொன்று தென்பட்டது நாம் சற்று நிம்மதியடைந்தோம்.

பின்பு தான்நாம்புங்குடுதீவு கடற்பரப்பில் நிற்பதை உணர்ந்தோம். கடற்படையினர் எம்மை கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பின் மறு நாள் காங்கேசன் துறை தடுப்பு முகாமிற்கு அனுப்பிவைத்தனர். அரசகட்டுப்பாடற்றபகுதியில் பொருட்களின் விலை உயர்வாலும் வேலைவாய்ப் பின்மையாலும் சீவிக்க முடியாத நிலையில் தலா மூவாயிரம் ரூபா கொடுத்து இந்தியா செல்லமுற்பட்டோம் என்றும் கூறினர். (ந-12)

## இளைஞர் வாரம்

வட பிராந்திய சத்தியசாயி இணைப்புக்களின் சார்பில் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் இளைஞர் வாரம் கொண்டாடப்படவுள்ளது.

எதிர் வரும் 5ஆம் திகதி திருநெல்வேலி சத்திய சாயி நிலையத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

இளைஞர் வாரத்தையொட்டி கவிதை, பேச்சுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது. (செ-ப-14)

## போட்டி முடிவுகள்

(நெடுந்தீவு)

தீவக வலயத்தால் கடந்த 28ஆம் திகதி நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியில்,

★ 16 வயதுப் பிரிவு 1ஆம் இடம் நயினாதீவு கணேசா வித்தியாலயம்,

★ 18வயதுப் பிரிவு 1ஆம் இடம் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகள் வெற்றியீட்டியுள்ளனர்.

## இன்று ஒரு தகவல்

# தன்னைக்காக்க மற்றவர்க்கு துரோகம் செய்யலாமா?

புங்கரல்லி நாட்டு அரசன் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையின் நிமிர்த்தம் சென்றான். அப்போது பாதை மாறி வெகு தூரம் தன் ஆட்களைப் பிரிந்து சென்று விட்டான்

அப்போது அவனை நோக்கிச் சிங்கம் ஒன்றுஓடிவந்தது. சட்டென்று அருகிலிருந்த பெரிய மரம் ஒன்றின் மீது ஏறினான்.

காரணம் அங்கேகரடிஒன்று உட்கார்ந்திருந்தது. பயந்து போன அரசன் கீழே பார்த்தான். இவன் எப்போது இறங்குவான் என எண்ணிய படியே மரத்தை சுற்றி சுற்றி வந்தது சிங்கம்.

இவனது நிலையைப் புரிந்து கொண்ட கரடி ''மனிதா! பயப்படாதே! இது என்னோட இடம் அதனால் உன்னைக்காப்பாற்றுவது என்னுடைய பொறுப்பு நீ இந்த மரக்கிளையிலே படுத்திரு சிங்கம் விடிந்ததும் போய் விடும் அப்போது நீ போகலாமென்றது.

மகிழ்ந்து போன அரசன் அந்த கிளையிலே படுத்துக் கொண்டான் அவனுக்குகாவலாக கரடியிருந்தது.

அரசன் தூங்கி விட்டதை அறிந்த சிங்கம் நீயும் நானும் ஒரேயினம் அவன் நம் இனத்தவரை அழிப்பவன். அவனுக்கு எதற்காக உதவி செய்கிறாய்? அவனை பிடித்து கீழேதள்ளு. நான் அவனை கொன்று விடுகிறேன். உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்றது. அதற்கு கரடி சிங்கமே! நாம் இருவர் ஒரே இனம் தான் ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ அவன் என் வீட்டிற்கு வந்து விட்டான் அத்துடன் அவனைக் காப்பாற்றுவேன் எனவாக்குறுதி கொடுத்து விட்டேன். இனி மேல் நான் அவனுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்வது கூடாது என்றது கரடி.

கரடியின் மீது வந்த கோபத்தை அடக்கிக் கொண்டுமரத்தடியில் படுத்துக் கொண்டது சிங்கம்.

சிறிது நேரத்தில் அரசன் விழித்தான் 'நண்பா! இப்போது நான் தூங்குகிறேன் நீ காவலிரு என்றது கரடி. சரி என்றான் அரசன்.

கரடி நன்றாக தூங்கியதை கண்ட சிங்கம் மெதுவாக அரசனிடம்பேசியது மனிதா! இந்தக் கரடி நம்ம இரண்டு பேருக்குமே எதிரி நானோ கடும் பசியிலுள்ளேன் நீ மெதுவாக அந்தக்கரடியைப்பிடித்து தள்ளி விடு அதை நான் தின்று விட்டுப் போகிறேன் என்றது.

சட்டென நன்றி கெட்ட அரசன் கரடியைப் பிடித்து கீழே தள்ளியது. விழுந்த வேகத்தில் கண் விழித்த கரடி கிளையொன்றைப் பிடித்துக் கொண்டது.

பிறகு மெதுவாக மேல் கிளைக்கு ஏறியது. இதைக் கண்ட அரசன் இனி நான் எமலோகம் செல்ல வேண்டியது தான். நன்றி கெட்ட எனக்கு இந்த தண்டனை தேவைதான் என்று நினைத்தான்.

மனிதனின் உடல் பயத்தில் நடுங்குவதைக் கண்ட கரடி 'மனிதா! பயப்படாதே! நான் உன்னைப் போல நண்பனுக்கு துரோகம் செய்யும் மனுஷன் அல்ல நீஒரு அரசன் உன் உயிரைக் கொடுத்து குடிமக்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நீயே, இப்படி இருந்தால் உன்னை நம்பி வாழும் குடிமக்களின் கதி என்ன?

'இனி துரோகம் செய்யாதே விடிந்ததும் நீ போகலாம்' என்றது கரடி. தன் நன்றி கெட்ட செயலை எண்ணி மிகவும் வெட்கமடைந்த அரசன் கரடியின் கால்களை பிடித்து அழுத படியேமன்னிப்பு கேட்டான். இக் காட்சியை கண்ட சிங்கமும்சற்றுமனம் நெகிழ்ந்தது. பிறகு இனி நாம் இங்கு நின்று பயன் இல்லை என்பதை அறிந்ததால் அவ் இடத்தை விட்டு சென்றது.

நன்றி

**பாப்பா முரசு**

# சாத்வீகப் போராட்டத்தைக் குழப்ப வன்முறைக்கும்பல் 'கலகம்' செய்தது

## சந்திரசேகரன் எம். பி பேட்டி

(கொழும்பு)

இராணுவத்தினரும், பொலிஸாரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிங்களக் காடையர்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான ப. சந்திரசேகரன் பி.பி.சி செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் தனது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பண்டாரவளை படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து அமைதியான முறையில் வீதிமறிப்பு போராட்டம் ஒன்று மலையகத்தில் எம்மால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எமது போராட்டம் முடிவுறும் தறுவாயில், எம் சாத்வீகப் போராட்டத்தைக் குழப்பும் நோக்கம்கொண்ட வன்முறைக் கும்பல்கள் கலகங்களில் ஈடுபட்டன.

கடைகளை எரித்தும், சொத்துக்களைச் சூறையாடியும் தமது வெறியாட்டத்தை ஆரம்பித்ததையடுத்து, பொலிஸ் மா அதிபரிடம் விடயத்தை விளக்கி, உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன்.

அங்கு பாதுகாப்புப் பணிக்கென படையினரும் பொலிஸாரும் அனுப்பப்பட்ட போதிலும், அவர்கள் கண் பார்வைக்குப் படும்படியாகவே சிங்களக் காடையர்கள் மலையக மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாக எனக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்று குறிப்பிட்டார்.

இதேசமயம், அமைச்சர் சந்திரசேகரன் மலையகத்தில் ஏற்பட்ட பதற்றநிலை தொடர்பான வாக்குமூலத்தினைப் பெறுவதற்கென நேற்று முன்தினம் நள்ளிரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# உப்புவெளி சுற்றிவளைப்பு

(வவுனியா)

திருகோணமலை உப்புவெளி கடலூர் கிராமங்களை ஞாயிறு காலை பொலிஸார் சுற்றி வளைத்து தேடுதல்மேற் கொண்டனர்.

இதன்போது சகலமக்களும் காளிகோவிலடிக்கு கொண்டு செல்லப்பட்டு கடும் சோதனைக்குட்படுத்தப் பட்டனர் இதன் போது இரு பெண்கள் உட்பட ஐந்து தமிழர்களைப் பொலிஸார் கைது செய்தனர்

(ந-5)

# விபலசாரதேரர் காலமானார்

[கொழும்பு]

சங்கைக்குரிய கலாநிதி மாவலகம விபலசார தேரர் (75 வயது) ஞாயிறு காலை

# நுவரெலியாவில்ஹர்த்தால் வரலாறுகாணாத வெற்றி

(பண்டாரவளை)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையப்படுகொலைகளை கண்டித்து ஞாயிறு நுவரெலியா மாவட்டத்தில்மலையக மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் பூரண வெற்றியளித்துள்ளதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

மலையக மக்கள் முன்னணியின் அழைப்பை ஏற்று இடம் பெற்ற இக்ஹர்த்தாலின் போது கடைகள்யாவும் பூட்டப்பட்டு கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம் பெறவில்லை. வீதிகள்யாவும் வெறிச்சோடிக்கிடந்தன.

தோட்டத்தொழிலாளர் வேலைகளுக்குச் செல்லவில்லை

நுவரெலியா மாவட்டத்தில் ஞாயிறு இடம்பெற்ற ஹர்த்தாலைப்போல் மலையகத்தில் எப்போதும் இடம் பெறவில்லை என்று செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வ)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடம் யாழ். வலயம் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத் திட்டத்தில் யாழ். கல்வி வலயத்தில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இதுவரை தாம்பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் தொடர்பான எழுத்துச் சோதனைகள், ஒப்படைகள், செயற்றிட்ட ஆவணங்களை இதுவரை தத்தம்பாடசாலைகளில் சமர்ப்பிக்காதிருந்தால் அவற்றின் இறுதி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு வசதியாக உரிய ஆவணங்களை பாடசாலைகளில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ந)

# அமைதிபேணுமாறு ஆறுமுகம் வேண்டுகோள்

(பண்டாரவளை)

பண்டாரவளையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்து மலையக மக்கள் தீயசக்திகளின் வலையில் வீழ்ந்து விடாது அமைதியாக இருக்குமாறு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் நோக்குடன் மலையகத்தில் இனக்கலவரத்தை தூண்டும வகையில் சிலதீய சக்திகள் ஈடுபட்டுள்ளன இதற்கு எதிரும் செவிசாய்க்காது அமைதியாக இருக்க வேண்டுவ என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# பஸ்- ஆட்டோ மோதியதில் இருவர் ஸ்தலத்தில் பலி

(கொழும்பு)

தனியார் சொகுசு பஸ்கும் ஆட்டோவும் நேருக்குநேர் மோதியதில் இருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

இவ்விபத்துச் சம்பவம் பற்

கொழும்பிலிருந்து தங்காலை நோக்கிச்சென்ற தனியார்பஸ் காலியிலிருந்து கொழும்புக்கு வந்து கொண்டிருந்த ஆட்டோவுடன் மோதிய போது இப் பரிதாப மரணம் நிகழ்ந்

# சிறுவர்

மோதியதில் இருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

இவ்விபத்துச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

க்கு வந்து கொண்டிருந்த ஆட்டோவுடன் மோதிய போது இப் பரிதாப மரணம் நிகழ்ந்துள்ளது. (ந – 2)

# ஈ.பி.ஆர்.எல்.எவ்'அமைப்பு வன்மையாக கண்டிக்கிறது

(வவுனியா)

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலையைக் கண்டித்து ஈ. பி. ஆர். எல். எவ்' அமைப்பின் வவுனியா மாவட்டச் செயலாளர் க. ஞானதாஸ் சிவம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் விபரம் வருமாறு.

மனிதநாகரிகமற்றகாடைத்தனம் கொண்டவர்களே இப்படிக் கொலைகளை செய்துள்ளார்கள் என்பதை உலகம் நன்கு அறியும்: 83ஆம்ஆண்டு 53 அரசியல் தமிழ்க்கைதிகள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மீண்டும் ஓர் முறை தமிழ் பேசும் மக்களுக்கு இக்காடையர்களின் கைவரிசை நினைவுபடுத்தியுள்ளது. அன்றைய சம்பவத்திற்கு ஆட்சியில் இருந்த அரசு பொறுப்புடன் நடந்திருந்தால் இந்த சம்பவத்தினை தடுத்திருக்க முடியும்.

இக்கோரச் சம்பவத்துக்கான துணிச்சலை ஒரு அரசியல் பின்னணியே வழங்கியுள்ளது என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. அரசினால் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு முகாமிலே மனிதஉயிர்களுக்கு குழி தோண்டப்படுகின்ற இந்த நிகழ்வு உலகமே வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையென்ற எண்ணப்பாட்டை இப் படுகொலை உண்மையாக்கியுள்ளது.

இனவெறியைத் தூண்டுகின்ற இது போன்றபோக்கை சட்டம் கண்டிக்காவிட்டால் கடந்த காலங்களிலே நடைபெற்ற இனப்படுகொலைகள் போன்ற வேதனைக்குரிய நிகழ்வுகளை மீண்டும் இந்த நாடு சந்திக்க நேரிடும். இக்கொலைக்கான சூத்திரதாரிகளை சட்டத்தின்முன்நிறுத்தி சரியான தண்டனை வழங்க சட்டமும் அரசும்முனைப்பாக செயற்படவேண்டும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ந)

சங்கைக்குரிய கலாநிதி மாவலகம விபலசார தேரர் (75 வயது) ஞாயிறு காலை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் காலமானார்.

தேசிய கலாசார நிலையத்தின் ஸ்தாபகரான இவர் 1925ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதி பிறந்தார். பௌத்த மத குருவாக 1940 ஆம் ஆண்டு தீட்சை பெற்று பௌத்த சமய கலாசாரத்துக்கு சிறந்த சேவையாற்றியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-2)

விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டும் விசாரணைக் குழுக்கள் நியமித்தும் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இச்சந்தர்ப்பத்தில் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும்

## சிறுவர் முதியோர் தினவிழா

(மட்டக்களப்பு)

ஆரையம்பதி பிரதேச செயலர்பிரிவில் சிறுவர், முதியோர் தினவிழா செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறுகிறது. (உ – 60)

### பண்டாரவளை கொலை சம்பவத்துடன்

# தொடர்புடையோர் கட்டாயம் தண்டிக்கப்பட்டே தீருவர்

### ஜனாதிபதி டக்ளஸிடம் உறுதி

(கொழும்பு)

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையோர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர் என ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பண்டாரவளையில் இடம்பெற்ற வெறியாட்டத்தில் படுகாயமடைந்த இளைஞர்களை தியத்தலாவை இராணுவ வைத்தியசாலை சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

அதன்பின்நேரடியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அலரிமாளிகையில் சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடிய வேளையில் இவ் உறுதிப்பாடு வழங்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

பண்டாரவளைப் படுகொலைக்கு காரணமானவர்களை இனம்கண்டு அவர்கள் மீது பாரபட்சமற்ற முறையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (உ)

# ஓர் அங்குலப் புத்தகத்தில் 1330 திருக்குறட்பாக்கள் இப்படியும் சாதனை

(சென்னை)

''ஒரு அங்குலம்'' அளவு கொண்ட புத்தகத்தில் திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் பேனாவினல் எழுதி முடித்து சாதனை புரிந்திருக்கிறார் வாலிபர் ஒருவர்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடை மருதூரைச் சேர்நத வெங்கட சுப்பிரமணியம் என்ற வாலிபரே இச்சாதனையை புரிந்துளார்.

இவரை தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் மூப்பனார் பாராட்டியுள்ளார் என்றும் இந்த புத்தகத்தின் நிறைய கிரமம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

# அமெரிக்க தாக்குதலுக்கு அஞ்சி ஆப்கானில் நாணய இறக்கம்

(காபூர்)

ஆப்கானின் நாணய மதிப்புக் குறைந்து அங்கு பணவீக்கம் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாணய மதிப்பு ஏன்குறைகிறதென்று வெளிநாட்டு பணச்சந்தைவர்த்தகர்களிடம் கேட்ட பொழுது ஆப்கான் மீது எந்த நேரமும் ரஷ்யா, அமெரிக்கநாடுகள் திடீரெனத் தாக்கக் கூடும் என்று மக்கள் அஞ்சுவதால் நாணைய மதிப்பு அமெரிக்க டொலரிலும் பார்க்கக் கீழே இறங்கியுள்ளது என்று தெரிவித்தார்கள்.

இதேவேளை ஜெமன் நாட்டில் அமெரிக்கப் போர்க் கப்பலை குண்டு வைத்துத் தாக்கியதற்கு ஆப்கானில் இருந்து செயற்படும் ஒஸ்லா மாபிள்லாவுடன் தொடர்பு இருப்பதாக அமெரிக்கா நம்புவதால் அதற்குரிய சான்று கிடைத்தவுடன் அமெரிக்கா தாக்குதல் நடத்தலாமென்று மக்கள் நம்புகிறார்கள்.

இதே போன்று 1998ல் அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்ட போது ஒஸ்லா மாபிள்லாடின்தான் இதற்குக் காரணம் என்று நம்பிய அமெரிக்கா அந்த இயக்கங்களின் முகாம்கள் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (து)

## பாதுகாப்பு அமைச்சர் மறுப்பு

(புதுடில்லி)

சீனப் பகுதிக்குள் இந்தியப் படையினர் புகுந்திருப்பதாக வெளியான செய்திகளை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் மறுத்துள்ளார்.

அருணாசலப் பிரதேசம் ஊடாக முன்னேறும் இந்தியப் படையினர் சீனப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பெனாசிர் பூட்டோவைக் கைதுசெய்யப்பிடிவிறாந்து

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தான் முன்னாள் பெண் பிரதமர் பெனாசிர் பூட்டோவை கைது செய்யுமாறு ராவல்பிண்டி நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள பெனசிர் பூட்டோ அதுதொடர்பான விசாரணைகளுக்கென நீதிமன்றில் ஆஜராகத தவறியதை அடுத்தே இவ் அவரை கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாய் தெரிய வந்துள்ளது.

அடுத்த மாதம் 10-ஆம் திகதிக்கிடையில் இவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது அதிகாரங்களை தவறாக பயன்படுத்தி சட்ட விரோதமாக சொத்து சேர்த்தார் என்றும், வெளிநாடுகளில் சட்டபூர்வமற்ற வகையில் 150 கோடி சொத்துக்களை வைத்திருந்தமை தொடர்பாகவுமே இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை, பெனாசிர் பூட்டோவெளிநாடொன்றில் தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

# காஷ்மீரில் போர் அபாயம்

(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீர் பகுதியில் மீண்டும் ஓர் எல்லைப்போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டை மீறி இந்திய எல்லைக்குள் நுழைய முயன்ற பாகிஸ்தான் ஊடுருவல்காரர் பல நூறு பேரை விரட்டியிருப்பதாக இந்தியத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

அத்துடன், கடந்த ஒரு சில தினங்களில் ஜம்முகாஷ்மீரின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 20 கெரில்லாக்கள் கொல்லப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இதே சமயம். பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலைகொண்டுள்ள அந்நாட்டுப் படையினர் தொடர்ச்சியான எறிகணை வீச்சை மேற்கொண்டு வருவதால் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்தும் பலியாகியும் வருவதாக தெரியவந்துள்ளது. (உ)

# மேற்கு வங்கத்தில் புயற் காற்று 80 மீனவர்களைக் காண வில்லை

(கல்கத்தா)

மேற்கு வங்கத்தைப் புயற் காற்றுத் தாக்கியதைத் தொடர்ந்து 80 மீனவர்களைக் காணவில்லை யென்று காவல் துறை அறிவித்துள்ளது.

இராம் நகர் கரையோரப் பகுதியை புயற்காற்று பெருமளவில் தாக்கியதாகவும், இதனால் 24 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களைக் காணவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கரையோரப் புயற் காற்றினால் நூற்றுக்கணக்கான குடிசைகள் சேதமடைந்துள்ளன.

காற்று மணித்தியாலத்திற்கு 75 கிலோமீற்றர்வேகத்தில் வீசியதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மேற்கு வங்கத்தை புயற் காற்று கடக்கக் கூடும் என முன்னரே அரசு எச்சரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (து)

# பாகிஸ்தானை சேர்ந்த எண்மர் போதை பொருட்களுடன் கைது

ஐம்பது கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் எட்டு பாகிஸ்தான் தீவிரவாதிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

டில்லியில்ஒதுக்குப்புறமான பகுதியில் இவர்களின் நடமாட்டத்தை அவதானித்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்ததுடன் அவர்கள் வைத்திருந்ததாகக்கூறப்படும் 15 கிலோ ஆர். டி. எஸ். வெடிப்பொருட்களையும், 50 கிலோ கெறோயின் போதைப் பொருட்களையும் கைப்பற்றினர்.

கைதான எட்டுப்பேரும் பாகிஸ்தானிய தீவிரவாதிகளென்றும், டில்லியில் தங்கள் சகாக்களுக்கு உதவும் பொருட்டே கெறோயின் கொண்டுவந்தார்களென்றும் பொலிஸார் கருதுகிறார்கள்.

இதேவேளை டில்லியில் குழப்பம்விளைவிக்கவே இவர்கள் திட்டமிட்டிருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# பங்களாதேஷ் பிரதமர் குவைத் பயணம்

(காட்மண்டு)

பங்களாதேஷ் பிரதமர் ஷேஹக் ஷீனா குவைத் நாட்டிற்கு 3 நாள் இராஜீக பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

1990இல் ஈராக்குவைத்தை ஆக்கிரமித்த போது 2 இலட்சம் பங்களாதேஷ் நாட்டவர் சொந்த நாடு திரும்பியிருந்த போதிலும் இவர்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம்

# பலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேல் பெண்கள் ஊர்வலம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்திற்கு ஆதர

பலஸ்தீனத்துடன் சண்டை வேண்டாம், அவர்களுக்கும்

களின் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார்

ணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்தல், பங்களாதேஷ் தொழிலாளர்களை குவைத்திற்கு அனுப்புதல் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல் இவையே பயணத்தின் முக்கிய நோக்கம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை,

ரு சொந்த நாடு திரும்பியிருந்த போதிலும் இவர்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் மீண்டும் குவைத் சென்றிருப்பதாகவும்,

மத்திய கிழக்கில் பணிபுரியும் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட பங்களாதேஷ் நாட்டவரால் வருடாந்தம் 2 m டொலரினை பங்களாதேஷ் நாடு வருமானமாகப் பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேல் பெண்கள் ஆர்ப்பாட்டமொன்றை செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இஸ்ரேல் வீதிகளில் இறங்கி ஆயிரக்கணக்கான பெண்கள பலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளார்கள்.

ஊர்வலத்தின் போது பலஸ்தீனத்துடன் சண்டை வேண்டாம், அவர்களுக்கும் தனிநாடு வேண்டும் போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிது நேரத்தில் பெண்களின் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் கலைத்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இஸ்ரேல் பிரதமர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் இன்று நாடாளுமன்றில் வரவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

# மனித உரிமை மன்றத்தில் இரண்டு தீர்மானங்கள் உதயம்

(சென்னை)

கன்னட நடிகர் ராஜ்குமார் விடுவிப்பு தொடர்பாக தமிழக புதுவை மனித உரிமைகளுக்கான சங்கம் 2 தீர்மானங்களை எடுத்துள்ளது.

அண்மையில் புதுவையில் மனித உரிமைகளுக்கான மன்றக்கூட்டத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பனால்பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ராஜ்குமார் உள்ளிட்ட மற்றையோர் விடுதலை தொடர்பாகவும் 52 தடாக் கைதிகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதன் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக லைவர் ரவி தெரிவித்தார்,

அந்த இரண்டு தீர்மானங்களும் பின்வருமாறு அமைகின்றன.

வீரப்பனின் தேடுதல் வேட்டை என்ற பேரில் அதிரடி நடவடிக்கைகளின் போது மக்களுக்கேற்பட்ட இடர்களை விசாரிக்க மனித உரிமைகள் மன்றத்துக்கு கன்னட அரசு தடைவிதித்ததை விசாரிக்க வேண்டும் என்றும் 52 தடாக்கைதிகளையும்உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமைகள் மன்றத்தைக்கேட்டுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## 2002 வரை பிரதமர் முஷாரப்

(இஸ்லாமபாத்)

சிவிலியன் பிரதமரை நியமிக்கும் எண்ணம் தமக்குக் கிடையாது என, பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறும் வரை தாமே ஆட்சியில் இருக்கப் போவதாகவும், அது வரைக்கும் வேறு சிவிலியன் ஒருவரைப் பிரதமராக நியமிக்கும் எண்ணம் தமக்கு கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## சமரச உடன்பாடு

(லண்டன்)

பெரும் உள்ளூர் கழகங்கள் இடம்பெற்று வந்த சொலமன் தீவுகளில் சமரச உடன்படிக்கையொன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (உ)

## ஐவர் சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் காஸா நிலப் பரப்பில் 5 பலஸ்தீனியர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் மேலும் வன்முறைகள் அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இம்மோதல்களால் 145 பேர் உயிரிழந்திருப்பதாகவும், இவர்களில் 8 பேர் அராபியர் எனவும் மீதிப்பேர் அனைவரும் பலஸ்தீனியர்கள் எனவும் தெரியவந்துள்ளது. (உ)

## ஆலய விபரம் திரட்டல்

(கல்வயல்)

இலங்கையிலுள்ள அம்பாள் ஆலயங்களின் வரலாறுகள் தொகுத்து மலராக வெளியிடப்படவுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் இலங்கையிலுள்ள அனைத்து அம்மன் ஆலயங்களிலும் வரலாறுகளை தொகுத்து மலராக வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மலரில் தமது ஊர் ஆலயங்களின் வரலாறும் தொன்மையும் இடம்பெற விரும்புவோர் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக தமது விபரங்களை அனுப்பி வைக்குமாறு பரிபாலன சபை கேட்டுள்ளது. (வி-111)

...கொடுத்தாலும் இன்
...லும் ஆற்றின் அடுக்கிய
...ற்றத்தால் சுற்றப்படும்''

– குறள்

# ...வலம்புரி

## ...ன் இந்தப் ...ாகுபாடு!

...டாரவளை படுகொ...லையைத்தொடர்ந்து ம...யகத்தில் பதட்ட நி... தோன்றியுள்ளது. பு...வாழ்வு என்ற பெயரில் நடந்த படுகொலையைக் கண்டித்து ஜனநா...க முறையில் பேரணி நட...ந்தியவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் நான்கு அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமிற்குள் கத்தி, கோடாரி சகிதம் நுழைந்த இளைஞர்களை வெட்டிக் கொலை செய்த பே..து துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்த பொலிஸார் மலையகத்தில் இடம்பெற்ற பேரணியின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது ஏன்? என்ற கேள்வி தமி...ழர்கள் மத்தியில் எழ...வே செய்யும்.

ம...லையக மக்களின் பேர...ணி மீது வேட்டுக்களைத் தீர்த்த பொலிஸார் விந்துனுவெவ முகாம் தாக்குதலின் போது; வேட்டுக்களைத் தீர்த்திருந்தால் 29 அப்...பாவித் தமிழ் இளைஞர்...கள் பலியாவதை தடுத்திருக்கலாம்

...இவற்றுக்கெல்லாம் மே...லாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அப்பாவித் தமிழ் மக்கள் கைதாகும் போதோ அல்லது அவர்களின் விடுதலையிலோ அக்கறை காட்டுவதில்லையென மலையகத்திலுள்ள தொழிற் சங்கமொன்றின் பிரதிநிதியொருவர் குற்ற...ஞ்சாட்டியுள்ளார்.

...வாக்குடையவர் க...ம், பணவசதி...

# அகத்தி மரத்தின் அதிசய குணநலன்கள்

தென்னிந்தியா முழுவதும், வீட்டுக் கொல்லைப் புறங்களில் பயிரிடப்படும் மரங்களில், அகத்தியும் ஒன்று. நாட்டு மருத்துவத்தில் இது மருந்தாக பயன்படுத்தப்படுகின்றது.

இதை சமஸ்கிருதத்தில் அகஸ்தயாவென்றும், ஹிந்தியில் பாஸ்னாவென்றும், வங்காள மொழியில் பாஸ்பீல் என்றும், குஜராத்தியில் அகத்தியாவென்றும், கன்னட மொழியில் அக்செ சோப்பு என்றும், தெலுங்கில் அகீஸ் அல்லது அவிசி என்றும், தமிழிலும் மலையாளத்திலும் அகத்தியென்றும், மராட்டிய மொழியில் மட்கா அகஸ்தா வென்றும் அழைக்கிறார்கள்.

### குணநலன்கள்

மருந்துக்குதவும் இந்த அதிசய மரத்தில், ஆறுவகைகள்

### பூக்களும் காய்களும்

இதன் இலைகளும், விதையுள்ள காய்களும், அதிலும் சிறப்பாக இதன் பூக்களும், காய்கறியைப் போன்று சமைக்கப்படுகின்றன. இவைகள் ஊட்டச்சத்து வாய்ந்தவை. உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியவை, சிறுநீர் கழிப்பதை உடலில் தூண்டக்கூடியவை, மலமிளக்கியாகவும் பயன்படுத்தப்படக் கூடியவை, இதினின்று கிடைக்கும் காய்களை சமைக்கலாம். சைனஸ் உபத்திரவம் உள்ளவர்களும், உடலில் வெற்றுக் கட்டிகளோ, கழலைகளோ வந்து துன்புறுபவர்களும், இதைமருந்தாகப் பயன்படுத்தலாம். வெள்ளைப் போக்கு நோயால் அவதியுறும் பெண்கள் புத்தம் புதிய அகத்திப் பூக்களை சேகரித்து நெய்யில் வதக்கி நாள் ஒன்றுக்குமூன்று தடவை

படுத்தினால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும். 30 அகத்தியிலைகளை எடுத்து, நன்றாக அரைத்து, தண்ணீரில்கலந்து, பின்னர் அதை வடிகட்டி நாள் ஒன்றிற்கு இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி வீதம் அருந்திவந்தால் வயிறு குணமடையும். அதிகமாக எடுத்தீர்களானால் பேதியும் வாந்தியும் ஆகலாம். எனவே அகத்தியிலைச்சாறுதனை உபயோகிப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இந்த இலைகளை நன்கு அவித்து அதன் நீரைப்பருகுதல் தோலில் ஏற்படும் பொக்குளங்களைப் போக்கவல்லது.

அகத்தி இலையில் ஏராளமாகக் கல்சியம், விற்றமின்-ஏ, அயன் போன்றஊட்டச்சத்துப் பொருட்கள் காணப்படுகின்றன. ஒரு கைப்பிடி அகத்தியிலுள்ள கல்சியத்தைப் பெற்றுக் கொள்ள நாம் 10 டம்ளர் புதிய பாலை அருந்த வேண்டும். அல்லது 20 முட்டைகளைச் சாப்பிட்டு ஈடுசெய்து கொள்ளவேண்டும்.

ஒரு கைப்பிடி அகத்தியிலையிலுள்ள காரோடீன் உருவிலே கிடைக்கப்பெறும் விற்றமின் -ஏயானது, நமது அன்றாட தேவைக்குப் போதுமானது. செழுமையான பச்சை அகத்தியிலைகளிலே அயன்சத்தும், பொஸ்பரஸும் ஏராளமாக இருக்கின்றது.

இலைகளின்று எடுக்கப்படும் பச்சைச் சாறானது சயம், ஆஸ்துமா, நாட்பட்ட இருமல், நுரையீரலில் ஏற்படும் சீழ்க்கட்டி, நாட்பட்ட பிராங்கைட்டிஸ், கணை நோய், புரதக் குறைவினால்

ஏற்படும் குவாஷியாகோர் எனப்பட்ட நோய், மாலைக்கண், போன்ற வியாதிகளால் துன்புறுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் திருப்திகரமான விளைவுகளைக் காணலாம். மேலும் நெருப்புக்காய்ச்சல் குளிர் ஜுரம் போன்றவியாதிகளால் அவப்படுபவர்களும் இந்த மருந்தை எடுப்பது நல்லது.

இந்த அகத்தி இலைகளின்று எடுக்கப்படும் புத்தம் புதிய சாற்றினை தண்ணீருக்குப் பதிலாக கோதுமைமாவிலே ஊற்றிப் பிசைந்து, ரொட்டி செய்தால், கல்சியம், அயன் சத்து, விட்டமின்-ஏ போன்றவை எடுக்கப்படாததால உடலில் ஏற்பட்டிருக்கும் குறைவுகள் அனைத்தையும் நீக்கிவிடும். இத்தகைய நன்மைகளைப் பெறுவதற்கு அகத்தி இலையை அவித்தும் சாப்பிடலாம்.

பச்சையான அகத்தி இலைகளை கசக்கிப் பிழிந்து சாறெடுத்து, சொட்டுச் சொட்டாக மூக்கினுள் விடுவோமானால், அதுமூக்கின் சளிச் சவ்வுகளில் ஏற்படும் அழற்சியையும், ஜலதோஷத்தையும், சைனஸ் தொல்லையையும் மூக்கில் ஏற்படும் அரிப்பையும் போக்கக்கூடியது. இச் சொட்டுகளை மூக்கினுள் ஊற்றுவதின்மூலம், மூக்கு இழந்துபோன தனது முகரும் வாசனையைத் திரும்பப் பெறலாம். மேலும் அகத்தி இலைகளை வாயில் வைத்து சுவைக்கும்போது, வாயில் கிருமிகளால் ஏற்படும் தொற்றுகளை ஒழித்துக்கட்டுகிறது.

நன்றி

- நல்வழி -

# மருத்துவ விளக்கம்

இந்தியாவில் காணப்படுகின்றன. களிமண் பிரதேசங்களில் நன்றாகப்பயிராகின்றது. மேலும் மண் இறுக்கமின்றி, மேடு பள்ளமாகக் காணப்படும்இடங்களிலும் இம்மரம் காணப்படுகின்றது. இது விரைவில் வளரக் கூடியதாகவும், வறட்சியை எதிர்க்கும் சக்தியுடைய தாகவும்காணப்படுகின்றது. விதைகளினின்று இம் மரங்களைப் பயிர்செய்யலாம். செப்டம்பர் மாதத்திலிருந்து, டிசம்பர் மாதம் வரை இம்மரங்கள் பூக்க ஆரம்பிக்கின்றன. இதன் காய்களைக்க கோடையில் நாம்காணலாம்.

வீதம் உண்டால் குணமாகும். மார்புச்சளி நோய் (புராங்கைட்டிஸ்) உள்ளவர்கள் இப் பூக்களைக் கசக்கிப் பிழிந்து 2 மேசைக்கரண்டியளவு சாறெடுத்து அதே அளவு தேனையும் சேர்த்து, தினமொன்றிற்கு மூன்றுவேளை அருந்தினால், மார்புச்சளியை வெளியே கொண்டுவந்துவிடும். இப் பூவின் சாறுதனை எடுத்துப் போட்டால், கண்நோய் குணமாகும். கண்ணில் ஏற்படும் வறட்சியை விரட்டியடிக்கும்.

### இலைகள்

அகத்தியிலைகளைப் பிழிந்து சாறெடுத்து பயன்

# எயிட்ஸை ஒழிக்க சித்த மருத்துவம்

எய்ட்ஸ் நோய் பற்றி ஞானோதய சித்த வைத்தியர் டாக்டர் சி.கே.மாணிக்கவாசகம் கூறுவது:-

பொதுவாக மனிதர்கள் உணவில் கசப்பு சுவைக்குரிய உணவுகளை போதுமான அளவு கலந்து உண்பதில்லை, ஆகவே சிலருக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடுவதால் நோய்கள் எளிதில் ஏற்படவாய்ப்புண்டு, எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் நோய் நீங்கிடச் சீழ்கண்...

### உபயோக முறை:-

தினமும் இக்கவலை எண்ணெய் போத்தலை ஒவ்வொரு முறையும், நன்றாகக் கலக்கி உணவிற்கு ஒரு நிமிடம் முன்பாக காலை, பகல், இரவு, மூன்று வேளையும் வேளை ஒன்றிற்கு ஒரு மில்லியை (சுமார் 2 சொட்டு) உள்ளங்கையில் விட்டு நாவினால் தொட்டு சாப்பிட வேண்டும்,

மேலும் பகல் சுமார் 11.00 மணிக்கு மூன்று வில்வ இலை

# மலையகத்தில் வன்முறை அரசு தடுக்க வேண்டும்

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் ஒரு மிருகத்தனமான செயல்.

இவ்வாறு அகில இலங்கை விவசாய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் ஆறுமுகம் கிருஷ்ணசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இப்படுகொலையில் கொல்லபட்டவர்களின் குடும்...

இப் படுகொலைச் சம்பவம் சிறுபான்மையினர் மத்தியில் பாரியதாக்கத்தை ஏறபடுத்தியுள்ளது.

மலையகப்பகுதியில் கடந்த ஐம்பது வருடங்களாக தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள்;

ஆனால் பண்டாரவளைச் சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்ட சில தீயசக்திகள் மலையகத்தில் இனவாதத்தைத் தூண்டும் முகமாகச் செயற்பட்டு வருகின்றன...

வாககுடைய வா
ம், பண வசதி
வர்களினதும்
அக்கறை காட்டு
ற்கு அப்பாவிப்
து மக்களின் விடயத்
மனித உரிமை
ப்புகள் க்கறை
டுவதில்லையென்றும்
தனது குற்றச்
டை விரிவுபடுத்தி
ார்.
மையில், மனித
அமைப்புகள் பக்க
பின்றி உள்ளதை
ளவாறு எடுத்துக்கூறு
தலையாய கடமை
ம். அத்துடன் சிங்
பேரினவாதத்தின்
ப்பிடிக்கு ஆளாகி
களிலும், புனர்
வு முகாம்களிலும்,
வரியற்ற முகங்
கக் காலத்தை வேத
யுடன் கழிக்கும்தமிழ்
ளஞர்களின் விடு
லயிலும் மனித உரிமை
ப்புகள் காத்திர
பணியை ஆற்ற
ண்டும். அதன் மூலமே
ப்படை மனித உரிமை
யாவதுபேணமுடியும்

நோய் உள்ளவர்கள் நோய் நீங்கிடக் கீழ்கண்ட கலவை எண்ணெயை தயாரித்து வைத்துக் கொண்டு ஒரு மாதகாலம்உட் கொண்டு வந்தால் வியக்க தக்க வகையில் குணமடையலாம்.

| | |
|---|---|
| வேப்பம் எண்ணெய் | 100 g |
| தேங்காய் எண்ணெய் | 50 g |
| ஆமணக் எண்ணெய் | 50 g |

மேல் உள்ள எண்ணெய்களை ஒன்றாக கலந்து தூய்மையான துணியில் வடிகட்டி போத்தலில்நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் பகல் சுமார் 11.00 மணிக்கு மூன்று வில்வ இலைகளை மென்று அரைத்து நீரில் கலக்கி விழுங்கி வர வேண்டும். இரவு உணவு மாலை 6 மணிக்குள் முடித்தல் வேண்டும்மேலும் வழக்கமாக அவரவர் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாத உணவுகளை மட்டும் சாப்பிட வேண்டியதில்லை. ஒரு சிலருக்கு பேதியாகலாம். இத் தகையோர் கலவை எண்ணெய்யின் அளவை பாதியாக குறைத்து சாப்பிட வேண்டும்.

தொகுப்பு!- வெ. சிறிகிருஸ்ணவேணி

# தீவிரவாதிகள் சுட்டதில் 4 பொலிஸார் பலி!

## மந்திரி உயிர் தப்பினார்

(பட்ணா)

பீஹார் உதைபந்தாட்டப் போட்டியின் போது தீவிரவாதிகள் சுட்டதில் மாநில மந்திரி மயிரிழையில் உயிர் தப்பினார்.

நான்கு பொலிஸார் உயிரிழந்தனர்.

பீஹார் கான்பார் மாவட்டத்தில்சொக்காரியாகிராமத்தில் தொடராக நடந்த உதைபந்தாட்டப் போட்டியின் போது தீவிரவாதிகள கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

பரிசு வழங்க வந்த மாநில உயர்கல்வி அமைச்சர் சாதா அகமட் எதுவித காயமுமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார்.

மேலும் மூன்றுபொலிஸார் இதில் காயமடைந்துள்ளனர். தீவிரவாதிகள் இவர்களிடமிருந்து நான்கு துப்பாக்கிகளையும் கைப் பற்றிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(து-ந)

வது, இப்படு கொலையில் கொல்லபட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வளங்கப்படவேண்டும்.

அத்துடன் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களையும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் அரசாங்கம் இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலையகத்தில் இனவாதத்தைத் தூண்டும் முகமாகச் செயற்பட்டு வருகின்றன.

எனவே மலையகப் பகுதியில் இனவாத வன்முறைச் சம்பவங்கள் நடப்பதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார். (செ

# மலையகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட புகையிரத சேவை

(கொழும்பு)

மலையகத்திற்கான புகையிரத சேவைகள்நாவலப்பிட்டி வரைக்கும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

மலையகத்தில் இடம் பெற்ற கலவரங்களையடுத்தே புகையிரத சேவை இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென ரயில்வேத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியிலிருந்து பதுளை வரைக்கும் உள்ள ரயில் பாதைகளில் தடைகள் ஏதாவது போடப்பட்டுள்ளதா என்பதை ரயில்வே ஊழியர்களால் கண்காணித்து வருவதாகவும் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதி கிடைத்த பின்னர் பதுளை வரைக்கும் புகையிரத சேவைகள் நடத்தப்படும் என அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## ங்த்தர் சிலை மீட்பு

(கொழும்பு)

கடந்த 20 ஆம் திகதி விகாரை ஒன்றில் இருந்து திருடப்பட்ட இரு தங்கத்தினாலான சிலைகளில் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இதனை ஒருவர் விற்க முற்பட்ட போதே பொலிஸாரால் மீட்கப்பட்டதாகவும், அந்நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

(ந-5)

# குடியிருப்புகள் மீதான தாக்குதலை உடன் நிறுத்துமாறு வேண்டுகோள்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களை நோக்கி கண் மூடித்தனமாக நடத்தப்படும் எறிகணைத் தாக்குதல்களை நிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா பதில் பொலிஸ்மா அதிபர் ரி.எ. ஆனந்தராசவை சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பத்து நாட்களுக்குள் ஏழு இடங்களில் இடம்பெற்ற எறிகணைத்தாக்குதல்களில் பொதுமக்கள் இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இவ் எறிகணைத்தாக்குதல்களினால் இரவு வேளைகளில் மக்கள் பாதுகாப்பான இடங்களிலேயே தங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாக்குதல்களினால் சேதமடைந்த வீடுகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் அவ்வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். (வ-108)

## தாக்குதல் முறியடிப்பு ஒருவர் பலி 5 பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாஞ்சேலை வாழைச் சேனைப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையப் பகுதியில், தாக்குதலை மேற்கொண்டதாகவும் தாக்குதலைப் பொலிஸார் இராணுவத்தினரின் உதவியுடன் முறியடித்ததாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் றோசித்த வழச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கயமடைந்தவர்களை பொலநறுவைக்கு ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் மீது பொலநறுவை மட்டக்களப்பு வீதியில் புனானையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் சாரதி கான்ஸ்டபிள் நிமல் கொல்லப்பட்டதுடன் ஐந்து பொலிசார் காயமடைந்துள்ளதாக விஷேட ஊடகத்தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (2)

# ஓமந்தையில்கிளைமோர் இருவர்பலி இருவர்காயம்

இராணுவத்தினர் பயணம் செய்த உழவுயந்திரத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர் இருவர் படுகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஓமந்தைப் பகுதியில் இடம் பெற்றது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

படையினருக்கு இரவுச் சாப்பாட்டை ஏற்றிக் கொண்டு உழவுயந்திரத்தில் சென்ற படையினரை இலக்கு வைத்தே இத்தாக்கு நடத்தப்பட்டதாகவும் னால் உழவுயந்திரம் சேதமடைந்துள்ளதா தெரியவருகிறது.

இத் தாக்குதலில் மடைந்த இரு படை வவுனியா இராணுவ திய சாலையில் அனும பட்டனர். இவர்களில் ஒ மேலதிக சிகிச்சைக்கா ராதபுர வைத்தியசா மாற்றப்பட்டுள்ளத தெரிவிக்கப்படுகிறது. (வ-

## உயிரிழந்தோர் விபரம்

ஓயாத அலைகள் நான்கு நடவடிக்கையின் போது புலிகள் தரப்பில் உயிரிழந்த மூன்று கரும்புலிகளின் பெயர் விபரம்வருமாறு

- மேஜர்- வர்மன் (வடிவேல் தங்கத்துரை) மட்டக்களப்பு
- மேஜர்- சேபிதன் (துரைச்சாமி ஜிவகணபதி) வவுனியா
- கப்டன்- சந்திரபாபு (குமாரபோடி லிங்கராசா) மட்டக்களப்பு

ஆகியோரே தமதுதரப்பில் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். (வ-5)

## ஷெல் வீச்சில் ஒருவர் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு கறுவா கேணியில் நேற்று முன்தின இரவு இடம் பெற்ற எறி கணைத்தாக்குதலில் வயே திபர் ஒருவர் கொல்லப்பட் துடன் பெண் ஒருவரும் ப காயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தி இளையதம்பி துரையப் ப (வயது 60) என்பவரே கொ லப்பட்டவராவார். கா மடைந்தடிலிமா யோகராச என்னும் பெண் வைத்தியச லையில் அனுமதிக்கப்பட்டு ளார் எனவும் தெரிவிக்கப்படு கிறது. (வ-வி

## ஆரையம்பதி இளைஞர்மீது தமிழ்க் குழு தாக்குதல்!

(மட்டக்களப்பு)

ஆரையம்பதியில் தமிழ் குழு ஒன்றின் பலத்த தாக்குதலுக்குள்ளான இளைஞர் ஒருவர் மிக ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியைச் சேர்ந்த தாமோதரன் குகேந்திரன் [வயது-27] என்ற இளைஞனே இவ்வாறு தாக்கப்பட்டவராவர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது தீபாவளித்தினத்தன்று குறித்த தமிழ் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்கள் 'சிகரெட்' வாங்கிவருமாறு பிரஸ்தாப இளைஞனை அனுப்பவே அவர் தாமதமாக வந்தமையால் ஆத்திரமுற்ற தமிழ் கட்சி அமைப்பினர் அவ் இளைஞனை தடிகளால் கண்டபடி தாக்கியுள்ளனர்.

பலமாகத்தாக்கப்பட்ட இளைஞன் மயங்கி வீழ்ந்ததும் இறந்து விட்டார் என நினைத்து மணலினால் மூடி விட்டுச்சென்றதாகவும் இதன் பின்னர் அவ் வழியாக வந்த நபர் ஒருவர் மணலினுள் புதையுண்டிருந்த இளைஞரை மட்டக்களப்பு ஆதாரவைத்திய சாலையில் சேர்த்துள்ளதாகவும் தெரியவருகிறது. ]வ-4]

## போக்குவரத்து தடையால் நோயாளர் பெரும் அவதி!

(பண்டாரவளை)

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவத்தை அடுத்து மலையகத்தில் உள்ள பாடசாலைகள் கடைகள் யாவும் மூடப்பட்டும் போக்குவரத்துகள் எதுவுமின்றி நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

மலையகத்தின் பிரதான வீதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டிருந்ததினால் நோயாளர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வதில் பல சிரமங்கள் காணப்பட்டது.

பொகவந்தலாவை அரசினர் வைத்தியசாலையில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த இரு நோயாளர்களையும் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இத்தகையதொரு நிலை பொகவந்தலாவையிலிருந்து நோருட் பகுதிவரை செல்ல முடியாது காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீபாவளி விடுமுறைக்காக கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து வந்தவர்கள் திரும்பி அங்கு செல்ல முடியாத நிலையில் இருந்ததாகவும்

# பண்டாரவளை படுகொலை சம்பவ அரசில் அவநம்பிக்கை ஏற்படுத்து

## எதிர்க் கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

தாமாகவே முன்வந்து சரணடைந்த இளைஞர்களே பண்டாரவளை புனர்வாழ்வு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு படுகொலை புரிந்த செயலானது வடபகுதி இளைஞர்கள், ஆளும் அரசு மேல் மேலும் அவநம்பிக்கை கொள்ள வழி வகுக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மேற்படி படுகொலைச் சம்பவம்தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இப்படுகொலைகள் தொடர்பாக, விரைவில் சரியானதும், உண்மையானதுமான தகவல்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

பல்வேறு ஊடகங்களும் மேலும்இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக அமைந்துவிடலாம் எனவும் ரணில் விக்கிரமசிங்க அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

### மலையகத்தில்...

பலியான நான்கு அப்பாவித் தமிழ் இளைஞர்களின் மரண விசாரணையும்பிரேதபரிசோதனையும் நடைபெற்ற பின்னர் சடலங்கள் உறவினரிடம் கையளிக்கபபடும் போது ஏற்படக் கூடிய விளைவுகளைப் பொறுத்தே மலையகத்தின் அமைதி நிலை தெரியவருமெனத் தெரியவருகிறது.

மலையகத்தில் மேலும் சில பகுதிகளில் சுமுகமான நிலை இது வரைக்கும் தோன்றாதிருப்பதனால் அப்பகுதிகளில் வன் செயல்கள் வெடிக்கும் அபாயம் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்தும் கண்டியிலிருந்தும் ஹற்றன் நகரை நோக்கி வரும் எல்லைப் புறப்

### வவு...

மன்னாரிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க பட்டது.

ஹர்த்தாலையடுத்து வவுனியா நகரில் கடைகள் பூட்டப்பட்டு போக்குவரத்து சேவை நடைபெறவில்லை. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் யாவும் இயங்கவில்லை. வவுனியா மாவட்ட அரச வைத்திய சாலை ஊழியர்கள்வரவு குறைவாக இருந்த போதும் அத்தியாவசிய வைத்திய சேவைகள் இடம் பெ ரயில் சேவைகள் போல் இடம்பெற்ற

இதேவேளை ஹ மன்னார்

## கரவெட்டி...

பட்டார்.

சந்தப்பு தவராசாவின் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சுதாகரனும் அவரது மனைவி செல்வராணியும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர், பொலிஸாரினால் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்ட செல்வராணி தனது சினேகிதி சிறிதேவியுடன் நெல்லியடியிலிருந்துதச்சன்தோப்புக்கு வந்த போது இனம் தெரியாதோரால் கழுத்திலும் இடது கன்னத்திலும் நாடியிலும் வலது தோளிலும் வெட்டப்பட்டு மரணமானார்.

தகவல் அறிந்த நெல்லியடி பொலிஸார் சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்தார்கள்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-52)

ருந்து வந்தவர்கள் திரும்பி அங்கு செல்ல முடியாத நிலையில் இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## 4-வது

சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதல் அவரைக் கைது செய்வதற்கு முன்பு சபாநாயகரது அனுமதி பெற்றிருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதை அடுத்துகொட்டகொலப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும்அப்பகுதியில்உள்ள பெரும்பான்மை இனத்தவரை இருப்பிடங்களைவிட்டு வெளியேறுமாறு தமிழர்கள் தெரிவித்து வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை அடுத்து கொட்டகொலப் பகுதியில் தீவிர பாதுகாப்புக்காக மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (வ)

படுத்தப்பட வேண்டும்.

பல்வேறு ஊடகங்களும் இது தொடர்பாகத்தான் தோன்றித் தனமானகருத்துக்களை வெளியிட்டு வருவது,

## இனக்கலவரத்தை...

ளுக்கிடையே இனக்கலவரத்தை தூண்டுவதற்கு சில விஷமிகள் பின்னணியில் இருந்து வருகின்றனர்.

இந்த விஷமிகளின் தவறான நடவடிக்கைகளுக்கு மக்களை அடிப்பணிய வேண்டாம்எனக்கேட்டுக்கொண்டதுடன், விஷமிகள் மீது கடுமையானநடவடிக்கை எடுக்குமாறும் பாதுகாப்பு படையினருக்கு கடுமையான உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார். (ந-4)

## பொலிஸ்

பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் மீதான கோரப்படுகொலைக்கும் இந் நான்கு அதிகாரிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்களைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ந-4)

கொழும்பிலிருந்தும் கண்டியிலிருந்தும் ஹற்றன் நகரை நோக்கி வரும் எல்லைப் புறப் பாதையில் அமைந்துள்ளகினிகத்தனைப் பகுதியில் நேற்றுக் காலை சுமார் இருபது கடைகள் வரை சூறையாடப்பட்டு தீவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதிக்கு பஸ்ஸில் வந்த தமிழர்கள் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்ட பின் அவர்களின் உடமைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கினிகத்தனைப் பகுதியில் உள்ள கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதை யடுத்து அப்பகுதியிலிருந்த தமிழ் மக்கள் ஹற்றன், நவலப்யிட்டி வட்டவளை போன்ற இடங்களுக்கு ஓடித்தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தலவாக்கொல்லை, அக்கரைப்பத்தானைப் பகுதியில் நேற்றுக்காலை பதற்ற நிலை தோன்றியதை அடுத்து அப்பகுதிகளில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள்முன்னணி தலைவர் கைது செய்யப்பட்டதையடுத்து அவரது செந்த இடமான கொட்டகொலயில் பலகடை தீக்கிரையாக்கப்பட்டதாகவும் செய்திகள்

போல் இடம் பெற்ற...

இதேவேளை ஹ... டுத்து மன்னார் ...ழி புளொட் அமை...ம் தமிழ்வாசன் மற்றும் ச... ஆண்டான் றமணன் ... யோரை பொலிஸார் கை... செய்துள்ளதாக புளொ... தலைமையகம் தெரிவித்து... ளது.

றம்பைக் குளம், வைர... புளியங்குளம் ஆகிய இட... ளிலுள்ள புளொட் அலு... கங்களுக்கு முன்பாக பெ... ளவு இராணுவத்தி... க்கப்பட்டு வவுனிய... பாதுகாப்பு பலப்படு... பட்டிருந்தது. (வ)

தெரிவிக்கின்றன. இத்தக... பதட்ட நிலையை அடுத்... மலையக தமிழ்தலைவ... ளான அமைச்சர் ஆறுமு... தொண்டமான் இலங்... தோட்டத் தொழிலா... சங்க செயலாளர் ஏ.ஏ. இ... மையாவும் பதுளை விவச... தோட்டத் தொழிலாள... காங்கிரஸ் தலைவர் எஸ்... கிருஸ்ணசாமியும் சுயநலம் மிக்க தீயசக்திகளின் வலையில் விழாது கவனமாகவும் விழிப்புடனும் உண்மை நிலையை உணர்ந்து கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்கள் [வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.